# கிருபையுள்ள வார்த்தை®

KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

VOL - 26
ஆண்டு சந்தா ரூ. 100/-

ஆகஸ்ட் - AUGUST
தனிப் பிரதி ரூ. 10/-

2025
வெளிநாட்டு சந்தா ரூ. 1,000/-




**நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு; இளவயதும் வாலிபமும் மாயையே.**

பிரசங்கி 11:10


ஆசிரியர் Dr. பிலேமோன் ராஜா


புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும் 79வது சுதந்திரதின நல்வாழ்த்துக்கள்

## இதழின் உள்ளே...


ஆசிரியர் உரை 3

பெண்கள் பகுதி 7

வாலிபர் பகுதி 9

சிறுவர் பகுதி 11



*In Memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **Dr. P.C. PHILEMON RAJA**

*ஆசிரியர் குழு*

**V. கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
**R. ஆண்டனி ராஜா,** D.Th.,
**E. ஜோசப் பிரதீப்,** B.Th., **C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,
**P. பேபி ராஜா,** D.Th., **P. பெவர்லி லிடியா** B.B.A.,

*சட்ட ஆலோசகர்கள்*
அட்வகேட் **B.** கருப்பசாமி பாண்டியன் B.A., B.L.
அட்வகேட் **V.** சுப்பிரமணியன் M.A., B.L.


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

**தமிழன் T.V. யில்**

**ஞாயிறு காலை 7.00 மணி**

**நம்பிக்கை T.V. யில்**

**ஞாயிறு மதியம் 3.30 மணி**

செய்தியாளர்கள்

போதகர். **பிலேமோன் ராஜா** M.A., M.Th.,
(Director - JC School of Evangelism)

சகோ. **கிங்ஸ்லி ராஜா** M.Th.,
(இணை ஆசிரியர் – கிருபையுள்ள வார்த்தை)

**இந்த மாதம் பிறந்த நாள் மற்றும் திருமண நாள் காணும் வாசகர்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள்...**




**மாதந்தோறும் பார்வையற்ற மாற்றுத்திறனாளிகளுக்கு அரிசி வழங்கப்படுகிறது.**

**கிருபையுள்ள வார்த்தை**
வாலிபத்தினை ஒழுக்கம் மற்றும் தூய்மையாக உருவாக்க உதவும் உன்னதமான பிதாவின் வார்த்தை

YouTube **@graciouswordcoc**


**World Literature Publication :** Kirubaiyulla Vaarthai, Post Box No. 15, Arasaradi, Madurai - 625 016. India

- P.C. பிலேமோன் ராஜா



# இளைஞனே எழுந்திரு!
## Young man, Arise!

அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், இறைமைந்தன் இயேசுகிறிஸ்தவின் இனிய நாமத்தில் எனது அன்பின் வாழ்த்துக்கள் மற்றும் ஜெபங்கள்.

அன்பானவர்களே! ஆகத்து மாதம் 12ம் நாளை, உலகலாவிய வாலிபர்கள் தினமாக அனுசரிக்கின்றனர். ஆகையால் இந்த மாதம் வாலிபர்களை மையப்படுத்தி, பைபிள் என்ன சொல்லுகின்றது என்பதனை நாம் தியானம் செய்வோம். இந்த தியானம் வாலிபர்களுக்கானது என எண்ணி, பெரியவர்கள் தவறவிட வேண்டாம். உங்கள் வாலிப பிள்ளைகளை வசனத்தின்படி வழிநடத்த உதவும் என்பதினால், பரிசுத்த ஆவியானவரின் ஒத்தாசையுடன், கர்த்தருடைய வார்த்தையை கவனத்துடன் படிப்போம்.

லூக்கா 7:14ல் மரித்துப்போன ஒரு வாலிபனின் பிரேதத்தின் பாடையை ஆண்டவர் இயேசு தொட்டு, வாலிபனே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று சொன்னார். இன்றைய நாட்களிலும், உலகத்தின் செல்வாக்கினாலும், வழிபாடுகளினாலும், ஆன்மாவில் மரித்துப்போன, தோய்ந்துபோன வாலிப பிள்ளைகளை வாலிபனே! எழுந்துரு கன்னிகையே! எழுந்திரு என்று, ஆண்டவர் இயேசு சொல்வாரென்றால், அவர்கள் எவைகளிலிருந்து, ஏன் எழுந்திருக்க வேண்டும் என்பதனை அறிவது மிகவும் அவசியமாகும்.

### 1. ஏன் எழுந்திருக்க வேண்டும்

#### அ. வாலிபமும் இளவயதும் மாயை

பிரசங்கி 11:10 நீ உன் இருதயத்திலிருந்து சஞ்சலத்தையும், உன் மாம்சத்திலிருந்து தீங்கையும் நீக்கிப்போடு, இளவயதும் வாலிபமும் மாயையே.

ஏன் எழுந்திருக்க வேண்டுமென்றால், வாலிபமும் (இளமையும்) மாயை, அதாவது நிலையற்றது. இளமை என்பது நிரந்தரமற்றது என்ற யதார்த்த உலகத்திற்குள் அநேகர் வர மறுக்கின்றனர். இப்புவியில் மானிடராய் பிறந்த எவரொருவருமே எப்பொழும் இளமையாக (இளம் வயதினுடையவராக) இருப்பது சாத்தியமற்றது. அந்தந்த வயதில் அதற்கான முதுமை என்பது முகத்திலும், அகத்திலும் உண்டாகும் என்பது இறைவன் வகுத்த, இயற்கை சட்டமாகும் (பிரசங்கி 12:1-7).

தானாகவே எழுந்திருக்கக்கூடிய வயதில் எழுந்திருப்பதே சால சிறந்த முடிவாகும். நம்மை ஒருவர் தூக்கிவிட்டு எழுந்திருக்க வேண்டிய வயதில் அதனை செய்வது கடினமாகும் மற்றும் சிலவேளை முடியாமலும் போய்விடலாம். ஏசாவிற்கு அவ்வாறு தான் நேர்ந்தது, அவன் மனந்திரும்புதலை தேடியும், அதனை அடையாமல் போனான் (எபிரெயர் 12:16,17). தீமையானதை விட்டுவிடவும், நல்லவைகளை பற்றிக் கொள்ளவும் இதுவே சரியான பருவம் மற்றும் தருணம். எப்பொழுதும் இளம் பருவம் நீடிக்காது என்பதினை உணர்ந்தறிவோம்.

#### ஆ. தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார்

பிரசங்கி 11:9 வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும். உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட. ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.

ஏன் எழுந்திருக்க வேண்டுமென்றால், தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார். அதாவது நீ செய்கின்ற, பேசுகின்ற மற்றும் நினைக்கின்ற ஒவ்வொன்றையும் குறித்து, கர்த்தருக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும். தன்னை யாரும், எதுவும் கேட்க முடியாது என்ற வீண் மமதையுடனோ? தன்னை யாரும், எதுவும் கேட்க கூடாது என்ற அறிவற்ற வைராக்கியத்துடனோ, அநேக வாலிப பிள்ளைகள் இருக்கின்றனர். இந்த மனப்போக்கு மிகவும் ஆபத்தானதாகும்.

எப்போதும் தங்களை மகிழ்ச்சியாக வைத்துக்கொள்ள வேண்டும் என்பதற்காக, எதை வேண்டும் என்றாலும் செய்யவும், பேசவும் தயங்குவதில்லை. தங்களை சந்தோஷப்படுத்துகின்ற காரியங்களினாலே, பின்னாளில் சஞ்சலப்படப்போகின்றோம் என்பதனை அறியாமல் செய்கின்றனர். இது அறிவார்ந்த அனுகுமுறையல்ல. நாம் செய்த ஒவ்வொன்றிற்கும் கர்த்தரிடம் கணக்குக் கொடுத்தே ஆக வேண்டும் (2கொரிந்தியர் 5:10) மற்றும் எவரும் தப்பிக்கொள்ளவே முடியாது (எபிரெயர் 9:27).

## இ. இளமையில் பக்தி அவசியம்

பிரசங்கி 12:7 இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப்பிராயத்திலே நினை.

ஏன் எழுந்திருக்க வேண்டுமென்றால், பக்தி என்பது முதுமைக்கானது மட்டுமல்ல, இளமைக்கானதாகவும் இருக்கின்றது. அதனால் தான் பைபிள் உன் வாலிப பருவத்தில் உன்னைப் படைத்தவரை நினைத்து, அவர் சொன்னபடி வாழ் என்கின்றது. பொதுவாக இளம் வயதில் தேவ பக்தியுடன் இருப்பதினை அநேகர் விரும்புவதில்லை. அப்படி இருக்கின்ற ஒரு சிலரும் பரியாசம் செய்யப்படுவதினால், அதனை தவிர்க்கின்றனர். நாம் தவிர்க்க வேண்டியது பக்தியை அல்ல, பரியாசம் செய்யும் நபர்களைத் தான் (சங்கீதம் 1:1).

இளம் வயதில் யாரெல்லாம், கர்த்தரை பற்றிக்கொண்டார்களோ, அவர்களே பின்னாளில் மிகப்பெரிய ஜாம்பவான்களாக இருந்தனர் என்பதனை நாம் பைபிளில் படிக்கின்றோம். ஈசாக்கு, யாக்கோபு, யோசேப்பு, யோசுவா, தாவீது, தானியேல் என நீண்ட பட்டியல் உண்டு. இஸ்ரவேலர்களின் இளவயதின் பக்தியை கர்த்தர் பாராட்டினார் (எரேமியா 2:2). இளம் வயதிலிருந்தே, இன்னும் சொல்லப்போனால் சிறுவயதிலிருந்தே கர்த்தரை அறிவதே அருமையானதாகும்.

## ஈ. இளமையில் நுகத்தினை சுமப்பது நல்லது

புலம்பல் 3:27 தன் இளம்பிராயத்தில் நுகத்தைச் சுமக்கிறது மனுஷனுக்கு நல்லது.

ஏன் எழுந்திருக்க வேண்டுமென்றால், இளமையில் பாரங்களை சுமப்பது நல்லதாக இருக்கின்றது. இளம் வயதில் பொறுப்புகளை ஏற்பதும், பொறுப்புள்ளவர்களாய் நடப்பதும் மிகவும் நல்லது என்று பைபிள் சொல்லுகின்றது. ஆனால், பெரும்பாலான இளைய தலைமுறை பொறுப்புகளை தவிர்த்துவிடுவதும், பிறகு பார்க்கலாம் என தட்டிக்கழிப்பதும் மிகவும் வருத்தத்திற்குரிய செயலாக இருக்கின்றது.

நூலகத்தில், புத்தகங்களில் ஒரு தலைமுறை இளைஞர்கள் நேரங்களை செலவிட்ட போது, பொறுப்புள்ள அறிவார்ந்த சமூகம் உண்டானது. தொலைபேசியில், சமூக ஊடகங்களில் **(Instagram, Facebook, Google)** விளையாடுவது, ரீல்ஸ் பார்ப்பது, வீணாய் நேரத்தை செலவு செய்வது போன்று ஈடுபட்டு சமூக பொறுப்பு, குடும்ப பொறுப்பு அற்றவர்களாய் மாறி வரும் அவலம் நடந்தேறுகின்றது. தாங்கள் தண்ணீர், தேநீர் (Tea) குடித்த பாத்திரத்தினை, 10 நாட்களானாலும் எடுத்து வைக்காமலிருக்கின்றனர். தாயை வீட்டு வேலைக்காரி போலும், தந்தையை சம்பாதித்து கொடுக்கும் இயந்திரம் போல் நடத்துகின்றனர். இதற்குப் பிள்ளைகளை மற்றும் குறை சொல்லவிரும்பவில்லை. பெற்றோர்களும் சில நேரங்களில் இதற்கு காரணமாகின்றனர். ஆயினும், இளம் தலைமுறையில் இருந்தே பொறுப்புடன் இருப்பதே, எப்பொழுதும் மிகச்சிறந்த நற்செயலாகும். பொறுப்புகளை ஏற்பதும், நிறைவேற்றுவதும் தான் அறமாகும். அதனை தட்டிக்கழித்த நபரை ஆண்டவர் கண்டித்தார் மற்றும் தண்டிக்கச் சொன்னார் (மத்தேயு 25:24-30).

## உ. பொல்லாங்கனை வெற்றிக்கொள்ள

1 யோவான் 2:13,14 பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். வாலிபரே, பொல்லாங்கனை நீங்கள் ஜெயித்ததினால் உங்களுக்கு எழுதுகிறேன். பிள்ளைகளே, நீங்கள் பிதாவை அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதுகிறேன். பிதாக்களே, ஆதிமுதலிருக்கிறவரை நீங்கள் அறிந்திருக்கிறதினால் உங்களுக்கு எழுதியிருக்கிறேன். வாலிபரே, நீங்கள் பலவான்களாயிருக்கிறதினாலும், தேவவசனம் உங்களில் நிலைத்திருக்கிறதினாலும், நீங்கள் பொல்லாங்கனை ஜெயித்ததினாலும், உங்களுக்கு எழுதியிருக்கிறேன்.

பொல்லாங்கனை வெற்றிகொள்ள எழுந்திருக்க வேண்டும். நம்மைத் தகாத ஆசைகளைத் தூண்டி, தோற்கடித்த சத்துருவை, தோற்கடிக்க எழுந்திருக்க வேண்டும். நம்மால் சாத்தானை தோற்கடிக்க முடியுமா? நிச்சயம் முடியும் என்றே பைபிள் சொல்லுகின்றது. கர்த்தருடன் நாம் இணைந்து இருக்கும்போது இது சாத்தியமான மற்றும் எளிமையான ஒன்றாகும். கர்த்தர், நம்மை சாத்தனை தோற்கடிக்க செய்வார். ரோமர் 16:20 சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின்கீழே நசுக்கிப்போடுவார். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபை உங்களுடனேகூட இருப்பதாக. ஆமென்.

நம்மைப் பெலப்படுகின்ற கிறிஸ்துவினாலே, நமக்கு அவனை தோற்கடிக்க பெலன் உண்டு (பிலிப்பியர் 4:13). யுத்தமும் கர்த்தருடையது, வெற்றியும் கர்த்தருடையது. ஆகையால் சாத்தியமான ஒன்றை செய்ய, நாம் சிறிதேனும் சஞ்சலப்படவோ, சந்தேகப்படவோ வேண்டாம். விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் என்று ஆண்டவர் இயேசு சொன்னதினை நினைவில்கொள்வோம் (மாற்கு 9:23). நாம் கர்த்தர் மீது வைக்கின்ற விசுவாசம் நம்மை உலகத்தை வெற்றிக்கொள்ள உதவும் (1 யோ.5:4).

ஆகையால், இளைய தலைமுறையே எழும்புங்கள், பிரகாசியுங்கள். ஏனெனில் கர்த்தருடைய மகிமை உங்கள் மேல் உதித்துள்ளது (ஏசாயா 60:1).

## 2. எவைகளிலிருந்து எழுந்திருக்க வேண்டும்

ஏன் எழுந்திருக்க வேண்டும் என்பதனை அறிவதைப் போல, எவைகளிலிருந்து எழுந்திருக்க (வெளியே வர) வேண்டும் என்பதனையும் அறிவது மிகவும் அவசியமாகும்.

### அ. கூடா நட்புகளிலிருந்து...

சங்கீதம் 144:11,12 மாயையைப் பேசும் வாயும், கள்ளத்தனமான வலதுகையும் உடைய அந்நிய புத்திரரின் கைக்கு என்னை விலக்கித் தப்புவியும். அப்பொழுது எங்கள் குமாரர் இளமையில் ஓங்கிவளருகிற விருட்சக்கன்றுகளைப்போலவும், எங்கள் குமாரத்திகள் சித்திரந்தீர்ந்த அரமனை மூலைக்கற்களைப்போலவும் இருப்பார்கள்.

சங்கீதக்காரன் தங்கள் குமாரர் மற்றும் குமாரத்திகள் வாழ்வு செழிக்க, அவர்களை, மாயை மற்றும் கள்ளத்தனமான தவறான நட்புகளிலிருந்து விலக்கித்தப்புவிக்கும்படி ஜெபிக்கின்றார். ஏனெனில் தவறான நட்புகள் வாழ்வினை அழிப்பதாக இருக்கும். அது சரீர பிரகாரமான வாழ்வினை மாத்திரமல்ல, ஆத்துமாவிற்கும் அழிவினை வருவிப்பதாக இருக்கின்றது (நீதிமொழிகள் 22:24,25).

கூடா நட்பு கேடாய் முடியும் என தமிழ் பழமொழி உண்டு. ஆம் தவறான நட்புகள் அழிவை, சில வேளைகளில் பேரழிவை நமக்கும், நம்மைச் சார்ந்த அனைவருக்கும் உண்டாக்கும். நட்பு என்றாலே சிறந்தது தான். அது என்ன தவறான நட்பு என நீங்கள் வினவினால், பதில் எளிமையானதே, நீங்கள் தவறு செய்யும் போது, அதனைத் தடுத்து, உங்களை நேர்வழிபடுத்தாமல், நீங்கள் செய்யும் தவறுகளை உற்சாகப்படுத்துபவர்களும், உடன் இருந்து செய்பவர்களும் தவறான நண்பர்கள் தான். அப்படிப்பட்ட நட்பும் தவறானது தான். அவர்களை விட்டு நாம் விலக வேண்டும். இல்லையெனில் வாழ்வு வீணாகிவிடும் (நீதிமொழிகள் 13:20).

தவறான நட்பினால், ஞானி சாலமோனின் மகன் ரெகொபெயாம், தன் அரசாட்சியின் பெரும்பகுதியை இழந்தான் (1இராஜாக்கள் 12:1-20), தாவீதின் குமாரன் அம்னோன் மதிகேடான காரியம் செய்து, அழிந்துப்போனான் (2சாமுவேல் 13:1-33), நல்ல நண்பர்களைக் கொண்டிருந்த தானியேல் உயர்த்தபட்டான், அவன் நண்பர்களும் உயர்த்தபட்டனர் (தானியேல் 2:1-49).

### ஆ. பொல்லாப்புகளிலிருந்து

எரேமியா 3:4,5 நீ இதுமுதல் என்னை நோக்கி: என் பிதாவே, தேவரீர் என் இளவயதின் அதிபதியென்று சொல்லி, சதாகாலமும் கோபத்தை வைப்பாரோ? அதை என்றென்றைக்கும் காப்பாரோ என்கிறாய் அல்லவோ? இதோ, இப்படி நீ சொல்லியும் பொல்லாப்புகளைச் செய்து, மிஞ்சிப்போகிறாய் என்கிறார்.

கர்த்தரை அதிபதியாக, இளவயதிலே ஏற்றுக்கொண்ட இஸ்ரவேலர். பொல்லாப்புகளைச் செய்து, மிஞ்சிப்போனார்கள் என்று, கர்த்தர் அவர்களை சிட்சிக்கின்றார். இளவயதிலே நாம் எவைகளைவிட்டு எழுந்திருக்க வேண்டுமென்றால், அவர்களின் பொல்லாங்கான காரியங்களைவிட்டு வெளியே வர வேண்டும். இரத்தம் ஊறுகின்ற வயதில், செருக்கும் ஏறும். ஆகையால், பொல்லாப்பு செய்ய இருதயம் துணிகரங்கொள்ளும்.

தாவீது ராஜா, தன் இளவயதின் பாவங்களையும், மீறுதல்களையும் மன்னிக்கும்படியாக, கர்த்தரிடம் வேண்டுதல் செய்தார் (சங்கீதம் 25:7). பொல்லாங்கான காரியங்களை விட்டுவிட இளம்பருவம் மிகவும் அருமையானதாகும் என்பதனை நினைவில்கொள்வோம். எந்த தீய பழக்க, வழக்கங்களை விட்டு வெளியே வரவும், நல்ல பழக்க வழக்கங்களை உருவாக்கிகொள்ளவும் சரியான பருவம் இது. வாலவயது என்பது, பலவான் கையிலுள்ள அம்புகள் போன்று வீரியமானது (சங்கீதம் 127:4). பொல்லாப்பு செய்ய ஏதுவான துணிகரத்தினை தூக்கி எறிந்து, நன்மை செய்ய ஏதுவான துணிவினை நம்மில் வளர்த்தெடுப்போம். அதற்காகத்தான் நாம் படைக்கப்பட்டோம் (எபேசியர் 2:10).

### இ. மனம்போன போக்கில் செல்வதிலிருந்து..

பிரசங்கி 11:9 வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும். உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டுவந்து நிறுத்துவார் என்று அறி.

கண்ணின் காட்சிகளிலும், நெஞ்சின் வழிகளிலும் நடக்க விரும்புகின்ற இளம் வயதிலே, அவ்வாறு உன் மனம்போன போக்கிலும், உன் கண்போன போக்கிலும் செல்லாதே என பைபிள் அறிவுறுத்துகின்றது. தன் விருப்பத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கின்ற பருவம் இது. அதனால் தான் யார் என்ன சொன்னாலும் கேட்காமல், தங்களுக்கு சரி என பட்டவைகளைச் செய்ய அநேகர் முனைகின்றனர். பேதுருவும் அவ்வாறு இருந்தார் என ஆண்டவர் இயேசு சுட்டிக்காண்பித்தர் (யோவான் 21:18).

எது நீதி, எது நியாயம் என பார்க்க விரும்புவதில்லை. கூட இருக்கின்றவர்களும், உலகமும் உனக்கு எது சரி

என்று தோன்றுதோ அதை செய் என்றே ஊக்கப்படுத்துகின்றனர். பைபிள் வன்மையாக இதனை கண்டிக்கின்றது. கர்த்தர், பைபிளை கொடுத்தத்தின் நோக்கமே, நாம் நம் விருப்பபடி, மனம்போன போக்கில், சுயபுத்தியின்படியே செல்லக்கூடாது என்பதற்காகத் தான் என்பதனை நாம் உணர வேண்டும் (நீதிமொழிகள் 3:5,6).

ஆண்டவர் இயேசுவிடம், ஒரு பணக்கார தேவ பக்தியுள்ள வாலிபன், நித்திய வாழ்வினை பெற ஆலோசனை பெற வந்தான். ஆண்டவர் இயேசு, நித்திய வாழ்வினை பெற அவனுக்கு கொடுத்த ஆலோசனை என்பதினை அவசியமற்றதாக எண்ணி, அதை செய்யத் தவறினான் (மத்தேயு 19:20-22). அவன் தனக்கு எது சரியோ அதை செய்ய விரும்பினான். உண்மையில் எது சரியோ, அதனை செய்ய மனமில்லாதிருந்தான், இப்படிபட்ட மனமுடையோர் நித்திய வாழ்வில் பங்குபெறுவது கடினம் என்று, ஆண்டவர் இயேசு கடிந்துக்கொண்டார் (மத்தேயு 19:23,24). நாம் நம் மனம்போன போக்கில் செல்லாமல், கர்த்தருடைய வார்த்தையின் போக்கில் செல்ல நம் மனதினை பயிற்சிப்படுத்துவோம். அதுவே ஞானமான மற்றும் நீதியான முடிவாகும் (அப். 20:32; சங்கீதம் 19:7-9; 1பேதுரு 4:11).

இறுதியாக, பிரியமானவர்களே! ஆண்டவர் இயேசு, அற்புதங்கள் செய்யும்படியாக இந்த புவியில் மானுடராக பிறக்கவில்லை. ஆயினும் இந்த பூமியில் வாழ்ந்தபோது, செய்த அற்புதங்கள் ஏராளம் (யோவான் 20:30,31) ஆயினும் பைபிளில், பரிசுத்த ஆவியானவர், நமது விசுவாச வாழ்க்கைக்கு போதுமென்று எண்ணி, பதிவு செய்தவைகள் ஏறக்குறைய 40 அற்புதங்கள் தான். அந்த ஒவ்வொரு அற்புதங்களின் பின்னால் சென்று பார்த்தோமென்றால், பெரும்பாலும் அவர்கள் எல்லாம் தேடி வந்து, அற்புதமாக சுகம் பெற்றார்கள். ஆனால், இந்த இடத்தில் அந்த வாலிபனைத் தேடி, ஆண்டவரே சென்று அற்புதமாக அவனை எழுப்புகின்றார். சிறுவர்கள், முதியவர்கள், முடியாதவர்கள் எல்லாம் அவரை தேடி வந்தனர். ஆண்டவரோ வாலிபனைத் தேடி சென்றார்.

அன்புள்ள வாலிப தம்பி, தங்கைகளே இன்று உங்களையும் தேடி, ஆண்டவர் இயேசு தமது வார்த்தையின் வழியாக வருகின்றார். ஆகையால் அவருடைய வார்த்தையை மிகவும் கவனத்துடன் படித்து, உங்கள் வாழ்வினை. ஆத்துமத்தினை வசனத்தின்படி, கிறிஸ்துவிற்குள்ளாக அன்புடன் ஊக்கப்படுத்துகின்றேன்.

– அன்புடன், ஆசிரியர்

## பொதுவான செய்திகள்

### தேசியக்கொடி - இந்தியா

இந்திய தேசியக் கொடி அல்லது மூவர்ணக் கொடி என்பது இந்திய நாட்டின் தேசியக் கொடியாகும். ஒரு கிடைமட்ட செவ்வக வடிவ மூவர்ணக் கொடியான இதில், முறையே இளஞ்சிவப்பு (செம்மஞ்சள் நிறமான ஆரஞ்சி), வெள்ளை மற்றும் பச்சை (இந்திய பச்சை) நிற பட்டைகள் உள்ளன. கொடியின் நடுவில், கடற்படை நீல வண்ண நிறத்தில் அசோகச் சக்கரம் எனக் கூறப்படும் 24 ஆரங்களைக் கொண்ட சக்கரம் உண்டு. 22 சூலை 1947 அன்று நடைபெற்ற இந்திய அரசியல் நிர்ணய சபை கூட்டத்தின் போது இது தற்போதைய வடிவத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்டது. இது இந்திய விடுதலை அடைந்த நாளான 15 ஆகத்து 1947 அன்று இந்திய ஒன்றியத்தின் அதிகாரப்பூர்வ கொடியாக மாறியது. இந்தக் கொடி பின்னர் 26 சனவரி 1950 அன்று இந்தியக் குடியரசின் கொடியாக ஏற்றுக்கொள்ளப் பட்டது.

இந்தக் கொடியானது, பிங்கலி வெங்கையாவால் வடிவமைக்கப்பட்டு, குறிப்பிடத்தக்க மாற்றங்களைச் செய்து மகாத்மா காந்தியல் முன்மொழியப்பட்ட இந்திய தேசிய காங்கிரசு கொடியான சுவராஜ் கொடியை அடிப்படையாகக் கொண்டது. கொடியின் நடுவில் இருந்த நூற்புச் சக்கரம், 1947 ஆம் ஆண்டு அசோகச் சக்கரத்தால் மாற்றம் செய்யப்பட்டது.



2021 ஆம் ஆண்டில் கொடிக் குறியீட்டில் திருத்தம் செய்யப்படுவதற்கு முன்பு, கொடியானது காதி துணியினால் மட்டுமே உருவாக்கப்பட வேண்டும் எனக் குறிக்கப்பட்டிருந்தது. காதி என்பது கையால் சுழற்றப்பட்டு நூற்கப்பட்ட ஒரு சிறப்பு வகை துணியாகும். கொடிக்கான உற்பத்தி செயல்முறை மற்றும் விவரக்குறிப்புகள் இந்திய தரநிலைகள் பணியகம் மூலம் முறைப்படுத்தப் பட்டுள்ளன.

கொடியின் பயன்பாடு இந்தியக் கொடி மற்றும் தேசியச் சின்னம் தொடர்பான சட்டங்களால் நிர்வகிக்கப்படுகிறது. முந்தைய சட்டம் இந்தியாவின் விடுதலை நாள் மற்றும் குடியரசு நாள் போன்ற தேசிய நாட்களைத் தவிர தனியார் குடிமக்களால் கொடியைப் பயன்படுத்துவதைத் தடைசெய்தது. 2002 ஆம் ஆண்டில், இந்திய உச்ச நீதிமன்றம், குடிமக்கள் கொடியை பயன்படுத்த அனுமதிக்கும் வகையில் குறியீட்டை திருத்துமாறு இந்திய அரசுக்கு உத்தரவிட்டது.

# மனநிறைவை கற்றுக்கொள்வோம்!

பிரியமானவர்களே! அன்பர் இயேசு ராஜாவின் பெயரில் வாழ்த்துக்கள்! ஜெபங்கள்! பெண்களாகிய நமக்கு இருக்க வேண்டிய மிகவும் அத்தியாவசியமான பண்பு. அது என்ன? என்பதை வேதாகமத்தின் துணையோடே அதை எப்படி பயிற்சி செய்யலாம்? என்று தெரிந்து கொள்வோம்.

நம் வாழ்வின் திருப்தி நிலை என்பதை நாம் நம்முடைய சூழ்நிலைகளை வைத்தும், நம்மை சுற்றி அல்லது நம்முடன் இருக்கும் மக்களை பொறுத்து நிர்ணயிக்கின்றோம்.

## உதாரணத்திற்கு: (திருப்தியற்ற உலக சிந்தனை)

- ★ எனக்கு குழந்தைகள் இருந்தால் அல்லது குழந்தைகள் இல்லாவிட்டால் திருப்தியடைவேன்.
- ★ நான் பெண்ணாக இல்லாமல் ஆணாக பிறந்து இருந்தால் திருப்தியடைவேன். இந்த ஊர் இல்லாமல் வேறே ஊரில் பிறந்திருந்தால், இந்த குடும்பம் இல்லாமல் வேறு குடும்பத்தில் பிறந்திருந்தால் திருப்தியடைவேன்.
- ★ எனக்கு நல்ல மணவாழ்க்கை அமைந்திருந்தால் நான் திருப்தி அடைந்திருப்பேன்.
- ★ நான் திருமணம் செய்து கொண்டால் மட்டும் திருப்தியடைவேன்.
- ★ நான் தனியாகவே இருந்திருந்தால் திருப்தி அடைந்திருப்பேன்.
- ★ எனக்கு புதிய வாகனம் கிடைத்தால் திருப்தி அடைவேன்.
- ★ எனக்கு புதிய உடை, புதிய வீடு அல்லது பெரிய வீடு இருந்தால் நான் திருப்தியடைவேன்.
- ★ எனக்கு நல்ல சபை, என் மனதிற்கு ஏற்றபடி போதிக்கும் போதகர் இருந்தால் நான் திருப்தி அடைவேன்.
- ★ எனக்கு இப்படிப்பட்ட அண்டைவீட்டார் இந்த மாதிரி நண்பர்கள் இருந்தால் திருப்தியடைவேன்.

இப்படி நம் வாழ்வில் நாம் திருப்தியடைய பல காரணங்கள் மரணம் வரை நாம் தேடிக்கொண்டே இருக்கலாம். ஆனால் நம் மனதில் நாம் புரிந்துகொள்ள வேண்டியது இந்த உலகம் நமக்கு ஏராளமான பொய்களையும், மாயையான காரியங்களையும் சொல்லிக் கொடுத்து இருக்கிறது. பெண்களாகிய நம் மனதில் "போதும், திருப்தி" என்ற நிலைமை நாம் அடைய வேதாகமத்தின் மூலம் பரிசுத்த ஆவியானவர் நமக்கு துணை செய்கிறார். (பிலி. 4:10-13) நாம் படித்தோமானால் பவுல் இவ்வாறு எழுதியிருக்கிறார். அவர் இந்த புத்தகத்தில் "மகிழ்ச்சி" பற்றியும் துன்பத்தின் நடுவிலே எப்படி மகிழ்ச்சியாக இருப்பது / வாழ்வது என்பதை நமக்கு கற்றுக்கொடுக்கிறார். ஏனென்றால் அவர் அந்த நிலைமைக்குள் வாழ்ந்து கிறிஸ்துவுக்குள் வெற்றி அடைந்தவர்!

## வாழ்க்கையின் கஷ்டங்களால் மனநிறைவைக் கற்றுக்கொள்ள வேண்டும்:

அப். பவுல் பிலி. 4:11ல் சொல்வதை நாம் கவனித்தால் அங்கு அவர் தேவையைப் பற்றி பேசவில்லை. "தேவை" என்ற வார்த்தைக்கு கிரேக்க பொருள் "விரும்புவது" "பின்னால்" என்பதாகும். அதினால் தான் பவுல் சொல்கிறார். நான் உலகத்தின் பொருட்களை உலகத்தின் மற்ற காரியங்களையோ விரும்பவில்லை அதனால் நான் பின்வாங்கவில்லை. ஏனென்றால் அவர் தன் வாழ்வில் "திருப்தியைக் கற்றுக்கொண்டேன்" என்கிறார் (2 கொரி. 6:4-10) மற்றும் (2 கொரி. 11:22-28) இந்த வசனங்களை நாம் வாசிக்கும்போது

(தொடர்ச்சி... 8ம் பக்கம்)

## அறிந்து கொள்வோம்

## மாதம் ஒரு "பூ" வெட்சி



வெட்சி (இட்டிலிப் பூ) என்பது ரூபியேசியேக் குடும்பத்தைச் சேர்ந்த தாவரமாகும். என்றும் பசுமையான மலர்ச்செடிகளான ரூபியேசியே குடும்பத்தில் 529 சிற்றினங்கள் காணப்படுகின்றன.

உலகெங்கிலுமுள்ள அயன மண்டலம், உப அயன மண்டல நாடுகளில் தோன்றினாலும் அயன மண்டல் ஆசியா, குறிப்பாக இந்தியா இதன் பல்வகைமை செறிந்து காணப்படும் நாடாகும். இப்போது ஐக்கிய அமெரிக்கா நாடுகளிலும் வெட்சி வளர்க்கப்படுகிறது.

இத்தாவரம் 3-6 அங்குலம் நீளமுள்ள தோல் போன்ற இலையையும் சிறு பூக்களின் கொத்துக்களால் ஆனது. அமில மண்ணுக்கு பொருத்தமான இத்தாவரம் பொன்சாய் செய்கைக்கு ஏற்றது.

வெட்சி என்பது ஒருவகைக் காட்டுப்பூ. இக்காலத்தில் அழகுக்காக வீடுகளிலும் வளர்க்கப்படுகிறது.

இது ஊசி போல் அரும்பு விடும். வெண்ணிற வெட்சி அதியமானின் குடிப்பூ. செந்நிற வெட்சி போருக்குச் செல்வோர் சூடும் பூ.

ஏறு தழுவச் சென்றபோது, இடையர் குலக் காளையர் சூடியிருந்த பன்மலர்க் கண்ணியில் வெட்சிப்பூ அதன் இலைகளுடன் சேர்த்துத் தொடுக்கப்பட்டிருந்தது.

அப்.பவுல் தேவனுடைய மனுஷன் தன் வாழ்வில் பட்ட அத்தனை கஷ்டங்களையும் வேதனைகளின் வழியாய் அவர் திருப்தியடையக் கற்றுக்கொண்டேன் என்கிறார்.

(லூக்கா 12:15)ல் பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள் என்று சொல்கிறார். (1 தீமோ. 6:6-8) போதும் என்கிற மனதே தேவபக்திக்கு மிகுந்த ஆதாயம், (எபி. 13:5) நமக்கு இருப்பது போதும் என்று எண்ணுங்கள்.

(ரோமர் 12:1,2)-ல் தெளிவாக அவர் சொல்லும் காரியம் நமது "சரீரங்களை" ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்றும், நம் "எண்ணங்களை" புதிதாக மாற்ற வேண்டுமென்றும், நாம் மனதளவில் மறுரூபமாக வேண்டும் அதுவே நம் இருதயத்தில் திருப்தி தன்மை வளர உதவி செய்யும்.

## சூழ்நிலைகளைப் பொருட்படுத்தாமல் வாழ கற்றுக்கொள்ளுங்கள்:

பிலி. 4:12-ல் அவர் இன்னும் கொஞ்சம் விளக்கமாக இவ்வாறு விவரிக்கிறார். "தாழ்ந்திருக்கவும் எனக்கு தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத் தெரியும் எந்த காரியத்திலும் நிறைவாகவும், பசியாக இருக்கவும், மிகுதியாகவும், பற்றாக்குறையாகவும் இருக்கக் கற்றுக் கொண்டேன்."

கிறிஸ்தவப் பெண்களாகிய நாமும் கிறிஸ்துவை மிகவும் நேசிக்கிறோம். அவருக்காகவே நான் வாழ்கிறேன் என்று முடிவெடுத்து வாழும்போது நாம் நம் வாழ்வில் வரும் அத்தனை கஷ்டமான, போராட்டமான சூழ்நிலையையும் பொருட்படுத்தாமல் அவருக்காக தொடர்ந்து வாழ வேண்டும். அதற்கென்று நாம் நம்மை வசனத்தினாலும், ஜெபத்தினாலும் ஆயத்தப்படுத்த வேண்டும்.

## கிறிஸ்து இயேசுவில் உள்ள வளங்களையும் நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்:

ஆம் பிரியமானவர்களே! நாம் ஆவிக்குரியவர்களாக மன நிறைவுடன், மகிழ்ச்சியாக, திருப்தியுடன் வாழ இயேசுவின் வார்த்தை, வாழ்க்கை நமக்கு துணை புரியும் (2 கொரி. 11)ல் நாம் வாசிக்கும்போது பவுல் தன் வாழ்வில் எப்படியெல்லாம் கஷ்டங்களை, துன்பங்களை சகித்தார் என்று நமக்கு புரியும் (ரோமர் 8:35-37) கிறிஸ்துவின் அன்பு, தியாகம், இரத்தம் இவையே நமக்கு தேவனிடமிருந்து மன்னிப்பை பெற்றுக் கொடுத்து நம்மை நேசிக்கும் இயேசுவின் மூலம் நாம் நம் வாழ்வில் வரும் அத்தனை துன்பங்களையும் வெற்றி பெற முடியும்.

2 கொரி. 3:5 இந்த வசனத்திலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் மாபெரும் உண்மை. நம் தகுதி தேவனால் உண்டானது, நம் வாழ்வில் இருக்கும் முள் போன்ற காரியங்களுக்காக நாம் ஜெபிக்க வேண்டும் (2 கொரி. 12:9,10). பவுல் அப்படி செய்தபோது அவருக்கு கிடைத்த பதில் "என் கிருபை உனக்கு போதும்" நமது பலவீனங்களிலும் தேவன் நமக்கு பெலமாக, துணையாக இருப்பார். தேவனின் துணையே நம் வாழ்வில் எவ்வளவு கஷ்டங்கள், துன்பங்கள் வந்தாலும் நம்மைத் தேற்றும். பவுல் அதினால் தான் தன் குறைவுகளில் எல்லாம் நிறைவாக எண்ணினார். கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாக இருந்தார். நாமும் நம் துன்பத்தின் வழியாக நம் வாழ்வில் கற்றுக்கொள்வது.

கிறிஸ்துவுக்குள் மகிழ்ச்சியாயிருக்க (பிலி. 4:4) என்னால் முடியும் என்ற எண்ணத்தை வேதத்தின் துணையோடு வளர்த்துகொள்ள வேண்டும். ஏனென்றால் இந்த உலகம் ஏவாள், யேசபேல், போத்திபாரின் மனைவி, தெலீலாள், சலோமி, ஏரோதியாள், லோத்தின் மனைவி இப்படி பல பெண்களை வஞ்சித்தது, அவர்கள் தங்கள் வாழ்வில் திருப்தியற்ற குணத்தோடே இருந்ததால் பாவத்தில் விழுந்து, தேவனை விட்டு பிரிந்து சாபத்திற்குள்ளானதை நாம் அறிவோம்.

ஆகையால், பிரியமானவர்களே! கிறிஸ்தவ பெண்களாகிய நாம் வேதாகமத்தில் உள்ள பெண்களைப்போல கிறிஸ்துவுக்குள் வெற்றியுள்ள மன நிறைவான (1 தீமோ. 6:6-8) வாழ்க்கையை ஒவ்வொரு நாளும் முயற்சித்து வாழ்வோம். ஏனென்றால் இது எதுவும் மனுஷனால் கூடாது. "தேவனால் எல்லாம் கூடும்" ஆமென்.

– சகோதரி. **பெவர்லி கிங்ஸ்லி**

## வாசகர்களின் கவனத்திற்கு

அன்பான வாசகர்களே!
உங்கள் ஆண்டு சந்தா தொகையை
G-Pay, PhonePe மூலம் அனுப்பி
உங்கள் சந்தாவை
புதுப்பித்துக் கொள்ளவும்.
நன்றி!

ஆண்டு சந்தா : ரூ. 100/-
No. 92 4421 4421

வங்கிக் கணக்கில் செலுத்த,

A/c Name : Kirubaiyulla Varthai
A/c No. : 57022317422
IFSC Code : SBIN0011068
Branch : SBI - Bye Pass Road Branch, Madurai.

வாலிபர் பகுதி...

# திரளான மீன்களைப் பிடிக்கச் செய்தார்

யோவான் 21:1-9

முன்மாதத் தொடர்ச்சி....

## இயேசு செய்த அற்புதம்:

யோவான் 21:5,6 இயேசு அவர்களை நோக்கி: பிள்ளைகளே, புசிக்கிறதற்கு ஏதாகிலும் உங்களிடத்தில் உண்டா என்றார். அதற்கு அவர்கள்: ஒன்றுமில்லை என்றார்கள். அப்பொழுது இயேசு: நீங்கள் படகுக்கு வலதுபுறமாக வலையைப் போடுங்கள், அப்பொழுது உங்களுக்கு அகப்படும் என்றார். அப்படியே அவர்கள் போட்டு, திரளான மீன்கள் அகப்பட்டதினால், அதை இழுக்க மாட்டாதிருந்தார்கள்.

இயேசு அவர்களைப் பார்த்து பிள்ளைகளே என்று பாசத்துடன் ஒரு தகப்பன் தன்னுடைய பிள்ளையை அழைத்ததைப் போல அழைத்ததைப் பார்க்கிறோம். சாப்பிடுவதற்கு ஏதாவது அவர்களிடம் இருக்கிறதா என்று இயேசு கேட்டபோது, அதற்கு அவர்கள் ஒன்றும் இல்லை என்று தங்கள் தோல்வியை ஒத்துக் கொண்டனர். அவர்கள் மாலை 6 மணிமுதல் அடுத்தநாள் காலை 5 மணிவரை சுமார் 11 மணி நேரமாக மீன்பிடிக்க முயற்சித்தார்கள். ஆனால் அவர்களால் ஒன்றும் பிடிக்க முடியவில்லை. உடனே இயேசு அவர்களிடம் படகின் வலதுபுறமாக வலையைப் போடச் சொன்னார். கர்த்தர் தம்முடைய பிள்ளைகளுடைய வாழ்க்கையை வழிநடத்துகிறவர். என்ன செய்ய வேண்டும் என்று அவர்களுக்கு ஆலோசனை கூறியதை இங்கு பார்க்கிறோம்.

நம்முடைய வாழ்க்கையிலும் இயேசுவின் ஆலோசனையின்படி நாம் செயல்பட வேண்டும். அவருடைய ஆலோசனையின்படி சீஷர்கள் போட்டபோது திரளான மீன்கள் கிடைத்தது. வலையை இழுக்க முடியாத அளவுக்கு மீன்களைப் பிடித்தனர். ஆனால் வலை கிழியவில்லை. அது உறுதியாயிருந்தது. முழுமையான கீழ்ப்படிதல் இருந்தால் இப்படிப்பட்ட அற்புதம் நடக்கும். எங்கே தோற்றுப் போனார்களோ அந்த இடத்திலேயே அற்புதம் நடந்தது. மீன்கள் எங்கே, எவ்வளவு இருக்கிறது என்பதை அறிந்தவர் இயேசு. பேதுரு முதன்முதலில் கெனேசரேத் கடற்கரையில் இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் மீன்கள் ஒன்றும் கிடைக்காமல் நின்று கொண்டிருந்தான் அப்பொழுது இயேசு அவனைப் பார்த்து ஆழத்தில் தள்ளிக்கொண்டுபோய் வலைகளைப் போடுங்கள் என்றதை லூக்கா 5:4 ல் பார்க்கிறோம்.

இயேசு, பேதுருவை அப்போஸ்தலனாக்குவதற்கு விரும்பியிருந்ததால், அவன் அதற்கு நேர்மாறாக எந்த வேலைக்குச் சென்றாலும் அது தோல்வியாகத் தானிருக்கும். இதனிமித்தமே ஒரு மீனவனாய்ச் சென்ற பேதுரு, அன்றிரவு தோல்வியைத் தழுவினான். அவன் பிறவி மீனவனாதலால் எங்கே, எப்பொழுது, எவ்வளவு மீன்கள் கிடைக்கும் என்று தெரியும். ஆனால் அன்று அவனுடைய அறிவு தோல்வியைத்தான் கொடுத்தது. மேலும் இன்னும் 10 நாட்கள் அவர்கள் எருசலேமில் தங்கியிருக்க வேண்டும்.. அதன்பின்தான் அவர்கள் ஊழியத்தைத் தொடங்க வேண்டும். அந்த 10 நாட்களுக்குத் தேவையான செலவிற்காக இயேசு இவ்வாறு அற்புதம் செய்தார்.

## இயேசு அப்பம், மீன்களுடன் காத்திருந்தார்:

யோவான் 21 : 7 -9 ஆதலால் இயேசுவுக்கு அன்பாயிருந்த சீஷன் பேதுருவைப் பார்த்து: அவர் கர்த்தர் என்றான். அவர் கர்த்தர் என்று சீமோன்பேதுரு கேட்டவுடனே, தான் வஸ்திரமில்லாதவனாய் இருந்தபடியினால், தன் மேற்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலிலே குதித்தான். மற்ற சீஷர்கள் கரைக்கு ஏறக்குறைய இருநூறுமுழத் தூரத்தில் இருந்தபடியினால் படகிலிருந்து கொண்டே மீன்களுள்ள வலையை இழுத்துக் கொண்டு வந்தார்கள். அவர்கள் கரையிலே வந்திறங்கின போது, கரி நெருப்புப் போட்டிருக்கிறதையும், அதின் மேல் மீன் வைத்திருக்கிறதையும், அப்பத்தையும் கண்டார்கள்.

பேதுரு யோவானைப் போல கருத்து உள்ளவனாகத் தெரியவில்லை. இயேசுவுக்கு அன்பாயிருந்த யோவான், சீமோன் பேதுருவிடம் கரையில் நின்று கொண்டிருப்பது கர்த்தர் என்றான். பேதுருவிடம் காணப்படாத ஒரு ஆவிக்குரிய அறிவு யோவானிடம் காணப்பட்டதைப் பார்க்கிறோம். இதைப் போன்ற செயல்களை இயேசு செய்திருந்ததை யோவான் பார்த்திருந்ததால், கர்த்தரை அவனால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன்பாக அதே இடத்தில்தான் பேதுருவையும் யோவானையும் அழைத்திருக்க வேண்டும். இப்போது அவர்கள் மீன்பிடிக்கச் சென்று விட்டனர். யோவான் காத்திருப்பவர் கர்த்தர் என்றதால் பேதுரு படகு கரைக்கு வருகிற வரை காத்திருக்க முடியாமல் தன்னுடைய மேல்சட்டையைக் கட்டிக்கொண்டு கடலில் குதித்து இயேசுவிடம் வந்தான்.

படகு கரையிலிருந்து 200 மீட்டர் தூரத்திலிருந்ததால், படகிலிருந்த மற்றவர்கள் மீன்கள் இருந்த வலையை இழுத்துக் கொண்டு வந்தார்கள். மற்றவர்கள் படகு கரைக்கு வருகிறவரை காத்திருந்ததைப் போல பேதுருவால் காத்திருக்க முடியவில்லை. இதிலிருந்து இயேசுவிடம் பேதுருவுக்கு இருந்த அன்பைப் பார்க்கிறோம். அதனால் தான் இயேசு தனது கட்டளையை பேதுருவுக்கு கொடுத்து, அவனுடைய ஒவ்வொரு பிரசங்கத்திலும் 3000 பேர், 5000 பேர் என்று ஜனங்களை மனந்திருந்தி, இரட்சிப்புடையச் செய்தார். கர்த்தருக்கு அருகில் வர பேதுரு விருப்பப்பட்டதைப் போல கர்த்தருடைய வசனத்தை உணரும்போதெல்லாம் இயேசுவின் அருகில் செல்ல நாம் நம்மை அர்ப்பணிக்க வேண்டும். சீஷர்கள் கரைக்கு வந்தபோது கரி நெருப்பை மூட்டி, அப்பமும், மீனும் வைத்து இயேசு காத்திருந்ததைப் பார்க்கிறோம்.

யோவான் 21:10-12 இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் இப்பொழுது பிடித்த மீன்களில் சிலவற்றைக் கொண்டு வாருங்கள் என்றார். சீமோன் பேதுரு படகில் ஏறி, 153 பெரிய மீன்களால் நிறைந்த வலையைக் கரையில் இழுத்தான்; இத்தனை மீன்கள் இருந்தும் வலை கிழியவில்லை. இயேசு அவர்களை நோக்கி: வாருங்கள், போஜனம் பண்ணுங்கள் என்றார். அவரைக் கர்த்தர் என்று சீஷர்கள் அறிந்தபடியினால் அவர்களில் ஒருவனும்: நீர் யார் என்று கேட்கத் துணியவில்லை.

இயேசு சீஷர்களுக்காகத் தழலில் மீன் வைத்துக் காத்திருந்தார். அவர்களிடம் உள்ள மீன்களிலும் சிலவற்றைக் கொண்டு வரச்சொன்னார். உடனே பேதுரு 153 மீன்கள் கொண்ட வலையைக் கரையில் இழுத்தான். அவர்களுடைய பணியை இயேசு ஏற்றுக்கொண்டதை இது காட்டுகிறது. இயேசுவின் கட்டளையின்படி அவர்கள் மீன்பிடித்த போது, அதை அவர் ஏற்றுக் கொள்கிறார். அந்தக் காலை வேளையில் சீஷர்கள் குளிருக்கு நடுங்கிக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்துக்கு அனல் தேவையாயிருந்தது. அதனால் இயேசு கரிநெருப்பை வைத்திருந்தார். ரோமர் 12:11-ல் ஆவியில் அனலாயிருங்கள் என்றுள்ளது. பசியோடிருந்தவர்களுக்கு போஜனத்தைக் கொடுத்து ஆவிக்குரிய தேவையோடு சரீரத்தேவையையும் பூர்த்தி செய்கிறார்.

பெத்தலகேம் பாலகனான இயேசுவோடு நாம் இணைக்கப்படாமல் உயிர்த்தெழுந்து ஜீவிக்கிற, மகிமைப்படுத்தப்பட்டு, பிதாவின் வலதுபாரிசத்தில் இருக்கிற, கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டுள்ளோம். இதில் இயேசு மூன்று விதமான காரியங்களை சீஷர்களுக்கு நினைவுபடுத்துகிறார். திரளான மீன்களைப் பிடிக்கச் செய்து கடந்தகால அற்புதங்களை நினைவுபடுத்திப் பலப்படுத்த நினைப்பூட்டுகிறார். அடுத்ததாக கரிநெருப்புக்கு முன்பாகத்தான் பேதுரு இயேசுவை மறுதலித்தார். பாவமன்னிப்பின் நிச்சயத்தைச் சொல்ல வைக்க இயேசு அங்கு வந்தார். பேதுருவைப் பார்த்து நீ என்னை நேசிக்கிறாயா? என்று மூன்றுமுறை கேட்டு பேதுருவின் கையில் ஊழியத்தை மீண்டுமாய் ஒப்படைத்து அவருடைய ஆட்டுக்குட்டிகளையும், அவருடைய ஆடுகளையும் மேய்ப்பாயாக என்ற கனமான ஊழியத்தை ஒப்படைத்தார்.

இந்த அற்புதத்தின் முக்கியமான சத்தியம், அவர்களிடத்தில் என்ன இருந்ததோ அதையே பயன்படுத்தி அற்புதம் செய்தார். நம்மிடத்தில் இருக்கிற தாலந்தைக் கொண்டும், தேவனால் நம்மைப் பயன்படுத்த முடியும். நாம் இருக்கும் இடத்திலேயே ஆண்டவர் நம்மைப் பயன்படுத்தவில்லை என்றால், வேறு எந்த இடத்திலும் அவர் நம்மைப் பயன்படுத்த முடியாது. 153 பெரிய மீன்கள் பிடிக்கும்படி தம்முடைய சீஷர்களுக்கு அருள் செய்ததைப்போல, நமக்கும் தேவன் பெரிய அளவில் கொடுக்க வல்லமை உள்ளவர். இது இயேசு செய்த கடைசி அற்புதம். அதேபோல் இயேசு உயிர்த்தெழுந்தபின் செய்த ஒரே அற்புதம். புதிய உடன்படிக்கை ஊழியமானது, ஆண்டவர் மீது கொண்ட அன்பை அடிப்படையாக வைத்தே இருக்கிறது. இயேசு தன்னை முழுமையாக நேசிப்பவர்களையே ஊழியம் செய்யும்படி விரும்புகிறார். ஆமென்.

– உங்கள் அண்ணன் **JP**

## Gospel Through Media by Evangelism Team

**Philemon & Kingsly in Tamil:** **Tamilan TV:** Sunday 7:00 - 7:15 am.
**Nambikkai TV:** Sunday 3:30 - 4:00 pm.

**Rajanayagam & Benny Martin in Tamil:** **Nambikkai TV:** Tuesday 6:30-7:00 am & Friday 7:30 - 8:00 am

**Arjunan in Tamil:** Every Monday - Saturday 6:00 pm on **Joy TV.**

**Hindi TV program:** **Sunny, Francis, & Vinay David:** Sunday (7:00-7:30) pm, Friday 8:00-8:30 pm All on **Subha Sandesh** Hindi Channel

**P. K. Varghese in Malayalam:** Every Saturday 6:00-6:30 am on **Jai Hind TV.**

**Joshua & Ricky Gootam in Telugu:**
Every Sunday at 6:00-6:30 p.m. on **Subhavartha TV.**
Saturday at 6:00-6:30 a.m. on **Araadhana TV.**
Every day at 7:00 a.m. and 3:00 p.m. on **Kanthi TV** in A. P. only.

**Amul Bansod – Aurangabad (Marathi)**

**MCN News** channel: Monday, Wednesday, Friday – 7:30 AM to 8:00 AM.

சிறுவர் பகுதி

# யோனத்தான்

என் அன்பு குட்டி செல்லங்களா! இந்த மாதம் யோனத்தான் அண்ணாவின் நட்பை பற்றி படிக்கலாம். இஸ்ரேல் நாட்டிற்கு அரசனாக இருந்த சவுலின் முதல் மகன் தான் இந்த யோனத்தான். இந்த இஸ்ரயேல் நாடு மிகப்பெரிய ஆபத்தில் இருந்தது, அப்பொழுது கர்த்தருடைய பலத்தினாலே தாவீது அண்ணன் இஸ்ரயேல் நாட்டுக்கு வரும் பேராபத்தை தடுத்து இஸ்ரயேல் மக்களுக்கும், அரசனுக்கும் சமாதானத்தையும், மகிழ்ச்சியையும் கர்த்தருடைய வல்லமையினாலே கொடுத்தான். இதைக் கண்ட யோனத்தான் அண்ணாவுக்கு தாவீதின் மீது அளவு கடந்த நட்புணர்வு ஏற்பட்டது.

யோனத்தான் மற்றும் தாவீதுக்கிடையே இருந்த நட்பு விசுவாசம், மற்றும் தியாகத்தின் அடிப்படையில் அமைந்த ஒரு அற்புதமான நட்பு ஆகும். அவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் உறுதுணையாகவும், விசுவாசமாகவும் இருந்தார்கள். இவர்களின் நட்பு இஸ்ரயேல் மக்களிடையே ஒரு முக்கிய இடத்தை பிடித்தது. பிள்ளைகளே! இவர்கள் இருவரும் ஆழமான அன்போடு நடந்தார்கள். யோனத்தானும் தாவீதும் ஒருவரையொருவர் ஆழமாக நேசித்தார்கள்.

யோனத்தான் தாவீது அண்ணாவின் திறமையையும், கர்த்தர் மீதான விசுவாசத்தையும் கண்டு வியந்தார். யோனத்தான் ஒரு மாவீரர் தைரியசாலி. அவர் கழுகை விட வேகமானவர் சிங்கத்தை விட பலமானவர் என்று தாவீது சொன்னார். இவர் சவுலின் முதல் மகனாக இருந்ததால் அவர்தான் அடுத்த அரசனாக ஆகியிருக்க வேண்டும். ஆனால் கர்த்தர் தாவீதை தான் தேர்ந்தெடுத்து இருக்கிறார் என்பது யோனத்தானுக்கு தெரியும். அதற்காக அவர் பொறாமைப்படவில்லை. யோனத்தான் ஆவேசப்படவில்லை, தான் அரசனாக வேண்டிய இடத்தில் வேறொருவன் அரசனாக வேண்டுமா? என்பதிலே அவன் கோபப்படவில்லை. யோனத்தானும், தாவீதும் நெருங்கிய நண்பர்களாக ஆனார்கள். ஒருவருக்கு ஒருவர் ஆதரவாக இருந்தார்கள். ஒருவரை ஒருவர் பாதுகாக்க வேண்டும் என்று இரண்டு பேரும் ஒப்புதல் செய்து கொண்டார்கள்.

யோனத்தான் தாவீதின் நண்பன் என்பதைக் காட்டுவதற்காக, யோனத்தான் தன்னுடைய அங்கியையும், வாலையும், வில்லையும், இடுப்பு கச்சையையும் தாவீதுக்கு கொடுத்தார்.தன் தகப்பனாகிய சவுலிடமிருந்து தாவீது தப்பித்து ஓடிய சமயத்தில் யோனத்தான் தாவீதிடம் போய் தைரியமாக இரு கர்த்தர் உன்னைத்தான் அரசனாக தேர்ந்தெடுத்து இருக்கிறார், என் அப்பாவுக்கு கூட அது தெரியும் என்று சொன்னார். யோனத்தான் அண்ணா மாதிரி ஒரு நல்ல நண்பன் உங்களுக்கு வேண்டுமா? தன் உயிரை கூட பெரிதாக நினைக்காமல் யோனத்தான் தன் நண்பனுக்கு பலமுறை



உதவி செய்தார். யோனத்தான் அண்ணாவின் தகப்பன் சவுல், தாவீதைக் கொல்ல நினைப்பது யோனத்தானுக்கு தெரியும். அதனால் அவர் தன் அப்பாவிடம் போய் தாவீது எந்தத் தப்பும் செய்யவில்லை ஏன் அவனை கொலை செய்ய நினைக்கிறீர்கள்? அது பெரிய பாவம் என்று சொன்னார். அதை கேட்டு சவுல் ராஜா யோனத்தான் அண்ணா மேல் மிகவும் கோபப்பட்டார். தன் நண்பர் தாவீதுக்காக யோனத்தான் அண்ணா அரச பதவியை தூக்கியெறிந்தார்.

சில வருடங்களுக்குப் பிறகு சவுலும் யோனத்தானும் ஒரு போரில் இறந்து போனார்கள். இதைக் கேட்ட தாவீது அண்ணன் மிகவும் வேதனைப்பட்டு தன் நண்பனுக்காக கண்ணீர் விட்டு அழுதார். யோனத்தான் இறந்த பிறகு அவருடைய மகன் மேவிபோசேத்தை தாவீது தேடினார், அவனை கண்டுபிடித்ததும் உன் அப்பா எனக்கு நல்ல நண்பராக இருந்தார், அதனால் வாழ்நாள் முழுவதும் நான் உன்னை நன்றாக பார்த்துக் கொள்வேன், நீ என்னுடைய அரண்மனையில் தங்கி என்னோடு சேர்ந்து சாப்பிடுவாய் என்று சொன்னார். தன்னுடைய நண்பர் யோனத்தானை தாவீது மறக்கவே இல்லை.

ஆம், பிள்ளைகளே! நம் ஆண்டவர் இயேசு சொல்லி இருக்கிறார், நான் உங்கள்மேல் அன்பு காட்டியதுபோல நீங்களும் ஒருவர்மேல் ஒருவர் அன்பு காட்ட வேண்டும், ஒருவன் தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுக்கிற அன்பை விட மேலான அன்பு வேறு எதுவும் இல்லை என்று சொல்லி இருக்கிறார். யோனத்தான் அண்ணாவின் நட்பும் கூட தன் நண்பன் தாவீதுக்காக உயிரை கொடுக்கும் அளவுக்கு இருந்தது. நீங்களும் உங்கள் நண்பர்களிடம் உண்மையும், நேர்மையும், தியாகமும், விசுவாசமும், அன்பும் கொண்ட நட்புறவை வெளிப்படுத்துங்கள். உங்கள் நண்பர்களுக்கு உங்களிடம் உள்ளதை பகிர்ந்து கொடுங்கள். நீங்கள் நேசிக்கும் உங்கள் நண்பர்களிடம் நம் ஆண்டவர் இயேசுவின் தியாகத்தை வெளிப் படுத்துங்கள். கர்த்தர் உங்களோடிருந்து உங்கள் காரியங்களை வெற்றிச் சிறக்க செய்வாராக. ஆமென்.

**மனப்பாட வசனம்: யோவான் 15:13**

"ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை"

– சகோ. பீட்டர்

# பெரிய வெள்ளமும், பெரிய பேழையும் (கப்பல்)

கிறிஸ்துவுக்குள் அன்பான செல்லப்பிள்ளைகளா! எல்லாரும் எப்படி இருக்கீங்க? இந்த மாதத்திற்காக கடவுளுக்கு நன்றி சொன்னீங்களா? பரிசுத்த தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. இந்த மாதம் நாம் அனைவரும் சேர்ந்து ஒரு மிகப்பெரிய வரலாற்று நிகழ்ச்சியைப் பற்றி படிக்கலாமா?. வாங்க படிக்கலாம்.

கர்த்தர் பூமியையும் மனிதனையும் படைத்ததற்குப் பிறகு, கர்த்தர் சாப்பிடவேண்டாம் என்று சொன்ன நன்மை தீமை அறியத்தக்க பழத்தை மனிதன் சாப்பிட்டான். மனிதன் கர்த்தருக்கு விருப்பம் இல்லாத அநேக செயல்களைச் செய்தான். கர்த்தர் சொல்லாத காரியங்களை மனிதர்கள் தொடர்ந்து செய்துகொண்டு அதாவது பாவம் செய்துகொண்டு வந்தனர். இதனால் பூமி முழுவதும் பாவத்தினால் நிறைந்தது. கர்த்தர் மனிதர்களாகிய நம்மை படைத்ததற்காக மிகவும் வருத்தம் அடைந்தார். கர்த்தர் மனிதனையும் பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களையும் அழிக்கும்படி திட்டமிட்டார்.

கர்த்தர் சொன்ன வசனத்தின்படி நடக்காதவர்களை அழிக்கும்படி திட்டமிட்டார். ஆனாலும் ஒரு மனிதனுக்கு மாத்திரம் கர்த்தருடைய கண்களில் கிருபை அல்லது இரக்கம் கிடைத்தது. அந்த மனிதனின் பெயர் தான் நோவா. கர்த்தர் பூமியை அழிக்கும்படி நினைத்த சமயத்தில் பூமியில் வாழ்ந்த மனிதர்களிலேயே நோவா நன்மை செய்கிறவனாயும் நேர்மையானவராகவும் மற்றும் கர்த்தருடைய வார்த்தைகளுக்கு கீழ்ப்படிக்கிறவராகவும் வாழ்ந்தான். அதனால் கர்த்தர் நோவாவை நோக்கி; நீ உனக்காக கொப்பேர் என்னும் பெயர் கொண்ட மரத்தினால் உனக்கு ஒரு கப்பலை உண்டுபண்ணு என்று கட்டளை இட்டார். மேலும் கர்த்தர் கப்பலை எப்படி கட்டுவது மற்றும் எந்த அளவுகளில் வடிவமைப்பது பற்றியும் நோவாவிடம் கூறினார்.

நோவாவும் கர்த்தர் சொன்ன மாதிரியின் படியேயும், அவர் சொன்ன அளவுகளின்படியேயும் ஒரு கப்பலை கிட்டத்தட்ட 100 வருடங்கள் அயராது உழைத்து கட்டி முடித்தார். மேலும் கர்த்தர் நோவாவை நோக்கி பூமியில் நிலத்தில் வாழுகின்ற அனைத்துஉயிரினங்களையும் காக்கும்படியாக, ஒவ்வொரு உயிரினங்களிலும் ஆணும் பெண்ணுமாக ஏழு ஜோடி உயிர்களை கப்பலுக்குள் சேர்த்துக்கொள் என்று கட்டளையிட்டார். நோவாவும் கர்த்தர் சொன்ன படியெல்லாம் செய்து முடித்தார். நோவாவும் அவனது மனைவியும் அவனது மகன்கள் மூவரும் அவரது மருமகள்கள் மூவரும் அந்தக் கப்பலுக்குள் பாதுக்காக்கப்பட்டனர்.



மனிதன் செய்த பாவங்களுக்காக கர்த்தர் பூமியை அழிக்க நினைத்திருந்தாலும், ஒரே ஒரு நல்ல மனிதனை பாதுகாக்க நினைத்து அந்த மனிதனுக்காக கப்பலை உண்டுபண்ணும்படி கட்டளை கொடுத்தார். கர்த்தர் தன்னுடைய வசனத்தின்படி நடக்கிறவர்களை இப்படியாக பாதுகாக்கிறார். அருமையான செல்ல பிள்ளைகளா நாமும் கர்த்தருடைய வசனத்தின்படி வாழ்ந்தோம் என்றால் நாமும் அவருடைய கிறிஸ்துவின் சபை என்னும் கப்பலுக்குள் பாதுகாப்பாக இருப்போம்.

அந்தக் காலத்தில் நோவா கட்டிய கப்பல் வெள்ளத்திலிருந்து நோவாவினுடைய குடும்பத்தைப் பாதுகாத்தது. ஆனால் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் கட்டப்பட்ட சபையோ அவரை விசுவாசிக்கும் அனைத்து குடும்பங்களையும் பாவத்திலிருந்து பாதுகாக்கிறது. எப்பொழுதெல்லாம் நாம் சபைக்குச் செல்கின்றோமோ அப்பொழுதெல்லாம் நீங்கள் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று அர்த்தம். நாமும் நோவா போலவே கர்த்தருடைய சபையில் பாதுகாப்பாக இருப்போமா!!!..

**மனப்பாட வசனம்: ஆதியாகமம் 7:1**

"கர்த்தர் நோவாவை நோக்கி : நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்."

– சகோ. சந்தோஷ்குமார் மாகாளியப்பன்

சிறுவர் பகுதி

# மனோவாவின் மன்றாட்டு ஜெபம்



நியாயாதிபதிகள் 13 : 2 – 14

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா? எல்லாரும் நல்லாயிருக்கிறீர்களா?

மனோவா என்ற ஒருவரைப் பற்றி பைபிள் சொல்கிறது, என்ன தெரியுமா?

மனோவா கர்த்தரை நோக்கி, என் ஆண்டவரே! நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் எங்களிடம் வந்து, பிறக்கப்போகிற எங்கள் பிள்ளையை நாங்கள் எப்படி வளர்க்கனும் என்று எங்களுக்கு சொல்லனும் என்று வேண்டினார்.

தேவன் மனோவாவினுடைய ஜெபத்தைக் கேட்டார். அப்போ, அந்த தேவனுடைய தூதன் மறுபடியும் அந்த பெண்ணிடம் வந்தான். அவங்க வயலில் தனியாக உட்கார்ந்திருந்தாங்க மனோவா தன் மனைவியோடு இல்லை. அந்த பெண் வேகமாக ஓடி, தன் புருஷனிடம் வந்து, இதோ! அன்றைக்கு என்கிட்ட வந்த மனுஷன் மறுபடியும் வந்திருக்கிறார் அப்படின்னு சொன்னாள்.

மனோவா உடனே எழுந்து, தன் மனைவியைப் பின்தொடர்ந்து போனார். அவர் அந்த மனுஷனிடம் வந்து, என்னோடு பேசின மனுஷன் நீர்தானா? என்று கேட்டார்.

அதற்கு அவர் நான்தான் என்றார். அதற்கு மனோவா; நீர் சொன்ன காரியம் நடக்கும்போது, அந்தப் பிள்ளையைப் பற்றி என்ன கட்டளைகள் இருக்கு? அது எப்படி வளரனும் என்று கேட்டார்.

கர்த்தருடைய தூதன் மனோவாவைப் பார்த்து, நான் உன் மனைவிக்கு சொன்ன எல்லா வார்த்தையையும் கவனமாக கடைபிடிக்கனும் என்றார்.

என்ன சொன்னார் தெரியுமா? திராட்சைப் பழரசமோ அல்லது வேறு எந்த உடலைக் கெடுக்கக்கூடிய எதையும் சாப்பிடக் கூடாது என்றார். அவங்க அதை கடைப்படித்தார்கள். அதனால் கடவுளின் ஆசீர்வாதத்தைப் பெற்றார்கள்.

கடவுளுக்கு பிரியமான செல்லங்களா! இதிலிருந்து என்ன பாடம் கடவுள் கற்றுகொடுக்கிறார்.

நீங்களும் எதை செய்தாலும், ஜெபத்தில் கடவுளிடம் மற்றும் உங்கள் அம்மா அப்பாவிடம் கேட்டு செய்யனும். அவங்க சொன்னதை அப்படியே செய்தால் கடவுள் உங்களையும் ஆசீர்வதிப்பார். செய்வீர்களா? கீழ்படிவீர்களா? கடவுள் உங்களை ஆசீர்வதிப்பார்.

**மனப்பாட வசனம்: ஆதியாகமம் 22:18**

“நீ என் சொல்லுக்குக் கீழ்ப்படிந்தபடியினால், உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல இனங்களும் ஆசீர்வதிக்கப்படும் என்றும் என்பேரில் ஆணையிட்டேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார்.”

– சகோ. அன்பு ஏசுதாஸ்

## சிறுவர்களுக்கான கேள்விகள்

1. யோனத்தான் தாவீது அவர்களின் நட்பில் எப்படியிருந்தார்கள்?
2. நோவா கர்த்தருக்கு முன்பதாக எப்படிப்பட்டவராக வாழ்ந்தார்?
3. மனோவா கர்த்தரிடம் என்ன வேண்டினார்?
4. கோராகு மோசேக்கும், ஆரோனுக்கும் விரோதமாக பேசினது என்ன?
5. கோராகின் செயலால் நடந்தது என்ன?

## சிறுவர் பகுதி பதில் எழுதியவர்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | A. வினிகா ஜரோன் | - | கள்ளக்குறிச்சி |
| 2. | B. மாரல் ஜான்மோசஸ் | - | தூத்துக்குடி |
| 3. | A. ஹானா ஜோதிராணி | - | மதுரை |
| 4. | M. ஜோனத்தான் | - | கரூர் |
| 5. | A. சாம்குமார் | - | பெருமாள் வலசு |
| 6. | A. சுலக்சனா | - | பெருமாள் வலசு |
| 7. | V. ஏஞ்சல் ஜோயன்னா | - | மதுரை |
| 8. | M. அபி பிலேமோன் | - | எழுகம்வலசு |
| 9. | J. நவீன் பீட்டர் | - | மதுரை |
| 10. | J. கிறிஸ்டினா ஜாய்ஸ் | - | மதுரை |
| 11. | S. ஜூடா லியோ | - | ரஸ்தா |
| 12. | G. ஜெர்லின் | - | ரஸ்தா |

சிறுவர் பகுதி


# கோராகின் செயல்

**எண்ணாகமம் 16ம் அதிகாரம்**

கர்த்தரையும், சபையையும், வேதத்தையும் நேசிக்கிற செல்ல பிள்ளைகளே! நீங்களெல்லாரும் எப்படியிருக்கிறீர்கள். கர்த்தரின் பாதுகாப்பில் என்றும் நலமாயிருப்பீர்களாக.

குட்டீஸ்! இந்த மாதம் நாம் மீண்டும் ஒரு பைபிள் சம்பவத்தை படித்துக் கற்றுக்கொள்ளப்போகிறோம். அதென்னவென்றால், லேவி கோத்திரத்தில் பிறந்த ஒருவர் கோராகு. இவரை கர்த்தருடைய வாசஸ்தலத்திலே பணிவிடை செய்யும்படியாகவும், இஸ்ரயேல் சபையாரின் முன்னின்று பல வேலைகளை செய்யவும் கர்த்தர் தெரிந்தெடுத்திருந்தார். ஆனால் இவரோ ரூபன் கோத்திரத்திலுள்ள தாத்தான், அபிராம், ஓன் இவர்களோடுகூட இஸ்ரயேல் புத்திரரில் சபைக்குத் தலைவர்களும் சங்கத்துக்கு அழைக்கப்பட்டவர்களும் பிரபலமானவர்களுமாகிய இருநூற்று ஐம்பது பேரோடே சேர்ந்து, மோசேக்கும் ஆரோனுக்கும் விரோதமாகக் கூட்டங்கூடி, அவர்களை பார்த்து: நீங்கள் மிஞ்சிப்போகிறீர்கள்; கர்த்தருடைய சபைக்கு மேலாக உங்களை ஏன் உயர்த்துகிறீர்கள் என்று அவர்கள்மேல் பொறாமைக் கொண்டு பேசினார்கள்.

இந்த காரியம் கர்த்தருடைய பார்வையிலே கடும் கோபம் உண்டாக்குவதாய் இருந்தது. ஏனென்றால் மோசேயும், ஆரோனையும் கர்த்தரே தெரிந்து கொண்டு, எகிப்திலிருந்து இஸ்ரயேல் ஜனங்களை விடுவிக்கவும், இப்பொழுது வனாந்திர பிரயாணங்களிலே வழிநடத்தவும், அவர் (கர்த்தர்)



பேச வேண்டிய காரியங்களை மோசேயின் மூலமாகவே ஜனங்களுக்கு சொல்லவும் பயன்படுத்தினார் அல்லவா!

குட்டீஸ் இதற்கு முன்பதாக இதைப்போல் ஒரு நிகழ்வைப் படித்தோம் ஞாபகம் உள்ளதா? ஆம், அதுதான் மிரியாமின் செயல் (மோசேக்கு விரோதமாக முறுமுறுத்தது). அவர்களுக்கு என்ன நடந்தது என்பது தெரியுமல்லவா? அதைப் பார்த்தும் இவர்களுக்கு பயமில்லாமல் போனது.

அதன்பின் என்ன நடந்தது தெரியுமா குட்டீஸ்? கர்த்தர் அவர்கள் கடுங்கோபங்கொண்டு, கோராகு, தாத்தான், அபிராம் என்பவர்களுடைய வாசஸ்தலத்தை விட்டு விலகிப்போங்கள் என்று இஸ்ரயேல் சபையாருக்குச் சொல் என்றார். சற்று நேரத்திலேயே அவர்கள் நின்றிருந்த நிலம் பிளந்தது; பூமி தன் வாயைத் திறந்து அவர்களையும், அவர்கள் வீடுகளையும், கோராகினுடைய எல்லா மனிதரையும், அவர்களுக்கு உண்டான சகல பொருள்களையும் விழுங்கிப் போட்டது. அவர்கள் தங்களுக்கு உண்டானவை எல்லாவற்றோடும் உயிரோடே பாதாளத்தில் இறங்கினார்கள்; பூமி அவர்களை மூடிக்கொண்டது.

பிள்ளைகளா! இந்த சம்பவத்திலிருந்து நாம் கற்றுக் கொள்வது என்னவெனில், கர்த்தர் தெரிந்து கொண்டவர்கள்மேல் நாம் பொறாமைப்படவும், அவர்கள்மேல் எரிச்சலடையவும் கூடாது. ஏனெனில் அவர்களை கர்த்தரே பயன்படுத்துகிறார், அவர்கள்மூலம் தனது சித்தத்தையும், விருப்பத்தையும் நிறைவேற்ற அவர் போதுமானவர். எனவே, குட்டீஸ்! யார்மீது கோபமும், பொறாமையும், எரிச்சலும் அடையாமல், அவர்களோடே சண்டை பண்ணாமல் கர்த்தருக்கு மிகவும் பிடித்த சமாதானம், அன்பு, ஒற்றுமை, இரக்கம், விட்டுக்கொடுத்தல் ஆகிய குணங்களை வளர்த்துக்கொண்டால் உங்களது வாழ்வை ஆசீர்வாதமாக, நன்மையாக நிச்சயம் கர்த்தர் மாற்றுவார். கர்த்தர்தாமே உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென். அடுத்த இதழில் சந்திப்போமா!

**மனப்பாட வசனம்: கலாத்தியர் 5:26**

“வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமை கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.”

– சகோ. ஜான் செல்லையா

# ஆகஸ்ட் மாத கேள்விகள்

(ரோமர் புத்தகத்தில் இருந்து)



1) இச்சை பாவம் என்று சொல்லித்தருகிறது – எது?

2) பவுல் தன்னை வஞ்சித்து கொன்றது எதுவென கூறினார்?

3) பவுல் எதை செய்யாமல், எதை செய்கிறேன் என்றார்?

4) பவுல் யார் மூலமாய், யாரை தோத்தரித்தார்?

5) எதின்படி நடவாதவர்களுக்கு ஆக்கினைத் தீர்ப்பில்லை?

6) தேவன் தம்முடைய குமாரனை எதற்காக அனுப்பினார்?

7) மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள் யார்?

8) மாம்சத்தின்படி பிழைப்பதற்கு நாம் யார் அல்ல?

9) இக்காலத்துப் பாடுகள் எவைகளுக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல?

10) நம்முடைய பெலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறவர் யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 05-09-2025**

அனுப்ப வேண்டிய முகவரி : **சகோதரி. பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016.
செல் : 92 4421 4421, 92 4431 4431

## சென்ற இதழின் பதில்கள்

| | |
|---|---|
| 1. ரோமர் 6:13 | 6. ரோமர் 7:4 |
| 2. ரோமர் 6:19 | 7. ரோமர் 7:5 |
| 3. ரோமர் 6:18 | 8. ரோமர் 7:4 |
| 4. ரோமர் 6:22 | 9. ரோமர் 7:15 |
| 5. ரோமர் 7:4 | 10. ரோமர் 7:24 |

## சென்ற இதழின் கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்


| | | |
|---|---|---|
| 1) | P. ரேச்சல் ஜானிமா | நெல்லை |
| 2) | Mrs. ஹெலன் திலக் | தூத்துக்குடி |
| 3) | Mrs. தெல்மா ஸ்டான்லி | மதுரை |
| 4) | C. வைலட் கிறிஸ்டோபர் | தளவாய்புரம் |
| 5) | B. ஜெபா பென்ஹர் | தூத்துக்குடி |
| 6) | Mrs. சாந்தி வில்லியம் | புதுக்கோட்டை |
| 7) | Mrs. ஸ்டெல்லா ஜெபக்குமார் | நெல்லை |
| 8) | Mrs. பியூலா ஜேசுராஜன் | புதுவை |
| 9) | S. அசோக்குமார் பிரின்ஸ் | தூத்துக்குடி |
| 10) | S. கீதா அருண் | தூத்துக்குடி |
| 11) | G. ஏஞ்சலம்மாள் | மதுரை |
| 12) | Mrs. C. வள்ளி சிதம்பரம் | கரூர் |
| 13) | A. கார்பஸ் பிலேமோன் | மதுரை |
| 14) | M. ராஜா | கரூர் |
| 15) | M. ஈஸ்வரி முருகன் | கரூர் |
| 16) | R. ஞானசிரோன்மணி | மதுரை |
| 17) | Mrs. பட்ரிசியா டேவிட் | சேலம் |
| 18) | Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் | சேலம் |
| 19) | J. கிறிஸ்டோபர் சாந்தகுமார் | மதுரை |
| 20) | Mrs. A. இமல்டா சுந்தர்சிங் | ஈரோடு |
| 21) | S. ஷீபா ஞானவின்சா | டோனாவூர் |
| 22) | P. ஷைனி | காங்கேயம் |
| 23) | M. அன்பழகன் | தங்கமேடு |
| 24) | S. கார்த்திக் | கரூர் |
| 25) | Mrs.D. குளோரி திலகவதி | சென்னை |
| 26) | Mrs. சூரிய பிரியா | மதுரை |
| 27) | S. பேபி சந்தோஷ்குமார் | தங்கமேடு |
| 28) | D. சந்திரன் மோசஸ் | பெங்களூர் |
| 29) | P.S. ருக்மணி | ஈரோடு |
| 30) | Mrs. சாந்தி ஜோயல் | திருச்சி |
| 31) | J.V. சுந்தரபாய் வில்லியம் | சேலம் |
| 32) | J. ஜான்சி | ஆனைமலை |
| 33) | A. லலிதா | புதுக்கோட்டை |
| 34) | Mrs. இந்திரா பாண்டி | மதுரை |
| 35) | S. ஜெபமணி | தென்காசி |
| 36) | N. ஜான் செல்லையா | மதுரை |
| 37) | J. ஜெயராணி ஜான் | மதுரை |
| 38) | Mrs. ஆட்லின் ஆனந்தன் | மதுரை |
| 39) | Mr. ராஜன் | மதுரை |
| 40) | Mr. தாமஸ் ராபின்சிங் | பெரம்பலூர் |
| 41) | Mr. தமிழரசன் | நாமக்கல் |
| 42) | Mr. டேவிட் ராஜ் | அனவரதநல்லூர் |
| 43) | A. அரவிந்த் | மதுரை |
| 44) | Mrs. R. சரோஜா | தென்கலம் |
| 45) | Mrs.P. சமாதானம் பீட்டர் | விருதுநகர் |
| 46) | A. டேவிட் ஜெயசந்திரன் | மதுரை |
| 47) | Mrs. A. அன்னத்தாய் ஆல்பர்ட் | தூத்துக்குடி |
| 48) | M. பியூலா சாந்தி | ஈரோடு |
| 49) | Mrs. குளோரி பால்ராஜ் | தஞ்சாவூர் |
| 50) | Mrs. மேரி ராஜ் | மதுரை |
| 51) | S. டேவிட் சாந்தகுமார் | வல்லம் |
| 52) | A. ரோஸ்மேரி | சென்னை |
| 53) | Mrs. தேவி ராஜாசிங் | திருப்பூர் |
| 54) | V. மைனாவதி வசந்த் | தங்கமேடு |
| 55) | D.I. அன்பு சுதந்திரம் | ஏர்வாடி |
| 56) | Mrs. பெரில் பாஸ்கர் | படப்பை |
| 57) | M.S. ஜேம்ஸ் | திண்டுக்கல் |
| 58) | S. பாக்கியராஜம் | மதுரை |
| 59) | Mrs. ராணி குமரன் | கரூர் |
| 60) | Mrs. ஹெப்ஸிபா தாமஸ் | படப்பை |
| 61) | Mrs. ஜெயந்தி செல்வகுமாரி | தரங்கம்பாடி |

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

Place of Publication : 45 C/1, CHURCH LANE, CORONATION STREET, ARASARADI, MADURAI - 16.
Printed & Published by P.C. PHILEMON RAJAH
Printed at THEE CLASSIC PRINTERS, 27, KAKA THOPPU, MADURAI - 1 94421 23819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2024 - 2026
Date of Publication : 9th August 2025
Posted at Arasaradi HPO on 10th & 11th August 2025


## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்










அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/- மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!


## தபால் வழி பைபிள் பாடங்கள்






## கைபிரதிகள்









உங்கள் சுவிசேஷ ஊழியத்திற்கு கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில் பாதி விலையில் கிடைக்கும். விபரங்களுக்கு : 92 4421 4421, 92 4431 4431


## BIBLE STUDY BOOKS IN ENGLISH











AVAILABLE FOR SPECIAL PRICE!


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI
P.O. Box No. 15, Arasaradi,
Madurai - 625 016. India
biblecourseindia@gmail.com
@graciouswordcoc
92 4421 4421, 92 4431 4431

To